7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

120. 1989-ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுபான சில்லறை விற்பனை விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து மதுவிலக்கு மற்றும் ஆயத் தீர்வைத் துறையின் 22—5—1992 ஆம் நாளிட்ட 97-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (1937 ஆம் ஆண்டு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது.)

121. இந்தியாவில் தயாரிக்கப்பட்ட அயல்நாட்டு சாராவிகள் சில்லறை விற்பனைக் கடைகளுக்காக உரிமம் பெற்ற வளாகத்திற்குள் அல்லது பக்கத்தில் மதுக்கூடத்தைத் திறப்பது சம்பந்தமாக விதிகளை உருவாக்குவது குறித்து மதுவிலக்கு மற்றும் ஆயத் தீர்வைத் துறையின் 26—5—1992 ஆம் நாளிட்ட 99-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை (1937-ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54(3) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது.)

122. திருச்சிராப்பள்ளி, தீரன் சின்னமலை போக்குவரத்துக் கழகத்தின் நிலை ஊர்திகளுக்கு 1—4—1986 முதல் 30—9—1986 வரை செலுத்தப்பட வேண்டிய தண்ட வரி குறித்து உள் (போக்குவரத்து) துறையின் 29—9—1992 ஆம் நாளிட்ட 1648 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (1974 ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் வரிவிதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.)

123. 1989-90 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சர்க்கரைக் கழகத்தின் பதினைந்தாவது ஆண்டறிக்கை (1950-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது) (தமிழ், ஆங்கிலம்).

124. 1989-90-ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு கனிம நிறுவனத்தின் பன்னிரெண்டாவது ஆண்டறிக்கை (1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.) (தமிழ், ஆங்கிலம்).

(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள், ஏனைய தாள்கள்.

70. உடுக்குறியிடாத வினாக்கள் விடைகள் பட்டியல் (பத்தாவது பட்டியல்) (வரிசை எண் 1 முதல் 100 வரை).

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS